# நன்றியுரை

**"தமிழ்ப் புதுக்கவிதைகளில் இலக்கிய மரபுகளின் செல்வாக்கு"** என்னும் தலைப்பில் பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வு மேற்கொள்ள அனுமதியளித்த மதுரை காமராசர் பல்கலைக்கழகத்திற்கு நன்றி. கல்லூரியில் பணியாற்ற வாய்ப்பு நல்கி, தொடர்ந்து ஆய்வு மேற்கொள்வதற்கும் அனுமதியளித்த நாடார் மஹாஜன சங்கம் ச.வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி நிர்வாகத்தினருக்கும், கல்லூரி முதல்வர் மற்றும் சுயநிதிப்பிரிவு இயக்குநர் ஆகியோருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றிகளை உரித்தாக்குகின்றேன்.

ஆய்வில் என்னை முழுமையாக ஈடுபடுத்திக் காலதாமதமின்றி இலக்கியத்தில் முனைவர் பட்டம் பெற வேண்டும் என முறையாக நெறிப்படுத்தி, வழிநடத்திய என் ஆய்வு நெறியாளர் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் ம. திருமலை அவர்களுக்கு என் நன்றி. நாடிச்சென்றபோதெல்லாம் தாயுள்ளத்தோடு கனிவாக வரவேற்று உபசரித்த அன்னை திருமதி தி. கமலாதேவி அம்மா அவர்களுக்கும் அவர்தம் புதல்வர்களுக்கும் இதயம் நீங்கா நன்றிகள்.

என் ஆய்வுக்கு உறுதுணையாக இருந்து, அயராது துணை செய்த மேலூர் அரசு கலைக்கல்லூரி உதவிப் பேராசிரியர் முனைவர் செ. எபநேசர் அவர்களுக்கு நன்றி என்றும் உரியது. ஆய்விற்கு அவ்வப்போது உதவிபுரிந்த, உடன் பணியாற்றிவரும் தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் அனைவருக்கும் என் நன்றியை உரித்தாக்குகின்றேன். ஆய்வேடு உருவாக்கம் பெறத் தேவையான நூல்களையெல்லாம் வழங்கி உதவிய நா.ம.ச. ச.வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி நூலகத்தினர் மற்றும் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் நூலகத்தினருக்கும் நன்றிகள் பல.

முனைப்போடு ஆய்வுசெய்து முடிப்பதற்கு முழு ஒத்துழைப்புக் கொடுத்த அருமை மனைவி புவனேஸ்வரி, மகள் தாரிகாவுக்கு நன்றி. உயர்கல்வி பெற இலட்சிய உணர்வுகளை அளித்த தாத்தா முத்துச்சாமி

நாடார் – ஆச்சி ஆறுமுகத்தம்மாள் ஆகியோருக்கும், முனைவர் பட்டப்படிப்பு வரை பயிலச்செய்த என்னைப் பெற்றெடுத்த தாய், தந்தையர் ஆ. கருப்பையா நாடார் – ராஜலட்சுமி அம்மாள் மற்றும் உடன்பிறந்த சகோதர, சகோதரிக்கும் நெஞ்சார்ந்த நன்றிகளை உரித்தாக்குகின்றேன். மாமனார் துரைப்பாண்டி, மாமியார் அமிர்தவள்ளி ஆகியோருக்கும் நன்றியை உரித்தாக்குகின்றேன்.

ஆய்வுக் கட்டுரைகளைப் பொறுமையுடன் கணினித் தட்டச்சு செய்து கொடுத்த அன்பு நண்பர் மு. மாடசாமி அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றி.

**க. அல்லிராஜன்**